நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
முன்னிலை : திருமதி. V. பாரத தேவி, எம்.எல்.,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.
2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண் : 1717/2026
CNR No.TNTH020027042026

ராஜ் குமார் (48/2026),
த/பெ. ராஜீ ....மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – சார்பு ஆய்வாளர் அவர்கள்,
பழனிசெட்டிபட்டி காவல்நிலையம்,
குற்ற எண்.358/2026,
சட்டப்பிரிவுகள் 318(2), 336(3), 340(2), 318(4) BNS
....எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்றை தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கதிரேசன், அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>உத்தரவு</u>

மனுதாரர் இம்மனுவை பிரிவு 480 BNSS–வின் கீழ் பிசிபட்டி காவல்நிலையம், குற்ற எண்.358/2026, சட்டப்பிரிவுகள் 318(2), 336(3), 340(2), 318(4) BNS வழக்கிலிருந்து பிணைகோரி தாக்கல் செய்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பிற்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டது. அதில் இவ்வழக்கானது ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து வருவதாலும், எதிரிகள் மீண்டும் இதே செய்கையை செய்து பொதுமக்களுக்கு பொருட்சேதத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதாலும், வாதிக்கு உயிர்பயத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதாலும், வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைப்பு செய்ய வேண்டியுள்ளதாலும், மேலும் சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டியுள்ளதாலும், சாட்சிகளை உயிர்பயத்தை காட்டி கலைக்கக்கூடும் என்பதாலும், எதிரிகள் விசாரணைக்கு ஒத்துழைக்க மாட்டார்கள் என்பதாலும், வெளிமாவட்டத்திற்கு தப்பிச் செல்லக்கூடும் என்பதாலும், மனுதாரரான எதிரியானவர் பிணையில் வெளிவந்தால் வழிப்பறியில் ஈடுபடுபவர்களுக்கு மீண்டும் துணையாக இருக்கக்கூடும் என்பதாலும், வாதியை அழைத்து எதிரிகளை ஆஜர் செய்து அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டியுள்ளதாலும் பிணையில் விட கடும் ஆட்சேபனை கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பும் கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் பதிலினை பரிசீலித்தும் வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, இவ்வழக்கில் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்துவருவதாலும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரியின் மீதான குற்றம் சட்டப்பிரிவுகள் 336(3), 340(2), 318(4) BNS–கீழான கடுமையான குற்றம் என்பதாலும், மேலும் காவல்துறை தரப்பில் எழுத்துப்பூர்வமான பதில் அறிவிப்பிலும், எதிரியானவர் பிணையில் வெளிவந்தால் வழிப்பறியில் ஈடுபடுபவர்களுக்கு மீண்டும் துணையாக இருக்கக்கூடும் என்பதாலும், வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைப்பு செய்ய வேண்டியுள்ளது என்று கூறியதை கருத்தில் கொண்டும், சட்டப்பிரிவுகள் 336(3), 340(2), 318(4) BNS பிணை விடா குற்றம் என்பதாலும், இச்சூழ்நிலையில், பிணை மனு ஏற்க தக்கது அல்ல என இந்நீதிமன்றம் முடிவுசெய்து இப்பிணை மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டபின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்து இன்று 2026ம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.02 19:32:11 +0530

நீதித்துறை நடுவர்,
தேனி.